MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8 / MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# பிரதாப முதலியார் சரித்திரம் நாவலில் ஆண்-பெண் நிலைகள்

திரு மு.சிவசக்தி

முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழ்த்துறை

ஆர்.வி. எஸ் கலை அறிவியல் கல்லூரி.சூலூர்

நெறியாளர்

முனைவர் சி.கல்பனா

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்.

ஆர். வி. எஸ் கலை அறிவியல் கல்லூரி.சூலூர்.

# Pratapa Mudaliar's historical novel Male and female positions

Mr. SIVASAKTHI M

Doctoral researcher, Department of Tamil

R.V.S college of arts and science

Coimbatore

MAY - JUNE

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**Guide**

**DR S. KALPANA**

**Asst professor of Tamil**

**R.V.S college of arts and science, sulur**

**Coimbatore**

**Abstract**

**Novel literature is a boundless reflection of society. Different from short stories, this literature has multiple narrators, complex plot, time transition and deep character development. This article examines the relationships between men, women, family, education and freedom in the first novel of this literature, Pratapa Mudaliar Charitram.**

**Keywords: Education, Freedom, Patriarchy, Morality**

**ஆய்வுச்சுருக்கம்**

**சமூகத்தின் எல்லையற்ற பிரதி பலிப்பாக அமைவது நாவல் இலக்கியம் ஆகும். சிறுகதையிலிருந்து வேறுபட்டு பல கதை மாந்தர்கள், சிக்கலான கதைக்களம், கால மாற்றம் மற்றும் ஆழமான பாத்திரப் படைப்புகளை கொண்டு இருக்கும் இவ்விலக்கியத்தின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தில் ஆண், பெண்,குடும்பம் கல்வி,சுதந்திரம் என அவர்களின் உறவுநிலைகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.**

**திறவுச்சொற்கள்: கல்வி, சுதந்திரம், ஆணாதிக்கம், ஒழுக்கம்**

## முன்னுரை

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் முன்னோடி படைப்பாக விளங்கும் பிரதாப முதலியார் சரித்திரம், மயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இந்நாவல் சமூக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை பிரதிபலிக்கிறது. குறிப்பாக, ஆண்-பெண் உறவுகள், பாலின சமத்துவமின்மை, குடும்ப அமைப்பு போன்றவை தெளிவாக சித்தரிக்கப்படுகின்றது.

**வரலாற்றுப் பின்னணி**

19 - ஆம் நூற்றாண்டு தமிழ் சமூகம் பாரம்பரியஅடிப்படையில் இயங்கிய ஒன்று. அந்தக் காலத்தில் பெண்களின் சமூக நிலை குறைவாகவும், ஆண்களின் ஆதிக்கம் அதிகமாகவும் இருந்தது (**நாகராஜன், 2005).1** இந்நிலையில், இந்நாவல் அந்த சமூகவியல் அமைப்பை உண்மையுடன் வெளிப்படுத்துகிறது.

**ஆண் நிலைகள் குடும்பத் தலைமை**

நாவலில் ஆண் பாத்திரங்கள் குடும்பத்தின் தலைவர்களாக செயல்படுவதும். குடும்ப முடிவுகள் அனைத்தும் அவர்களால் எடுக்கப்படுவதைக் காணமுடிகிறது

(**பிரதாப முதலியார் சரித்திரம், பக். 78).1**

வள்ளுவரும் தனது திருக்குறளில்,

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை (குறள் எண் 54)2**

என்று குடும்பத்தை நடத்தும் ஆணின் தலைமைப்பாங்கை எடுத்துக்காட்டுகிறார்.

**பொருளாதார பொறுப்பு**

சங்ககாலம் முதல் பொருள் ஈட்டுதல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரித்தான பண்பாக கருதப்படுவதை, ஆண்கள் குடும்பத்தின் பொருளாதார ஆதாரமாகக் காணப்படுவதோடு அவர்கள் வேலை செய்து குடும்பத்தை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பாதுகாக்கும் பொறுப்பை ஏற்கும் நிலையும் புலப்படுகிறது.

**(இளங்கோவன், 2010).3**

என்று கூறுகிறார்.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**

**தொழுதுண்டு பின்செல் பவர் (குறள் எண் 1033)4**

உழைப்பின் பொறுப்பை ஆணிடமிருந்து வெளிக்காட்டுவதாக அமைகிறது. என்கிறார் வள்ளுவர்.

**சமூகச் சுதந்திரம்**

ஆண்களுக்கு கல்வி, தொழில், வெளிச்சூழல் ஆகிய துறைகளில் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. என்பதையும் அவர்கள் சமூகத்தில் முக்கிய இடம் பெற்றவர்களாக உள்ளதையும் இந்நாவல் வழியாக அறியலாம். குறிப்பாக ஒரு மனிதன் (ஆண்) கற்க வேண்டிய முறை கற்றதனால் ஏற்படும் உயர்வுகுறித்து,

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு. (குறள் எண் 1033)5**

என்று கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக இக்குறளும் தெளிவாகப் பேசுகிறது.

**பெண் நிலைகள்**

**குடும்ப மையப்படுத்தப்பட்ட வாழ்க்கை**

பொதுவாகவே பெண்கள் தனக்குத்தானே சில கட்டுப்பாடுகள் விதித்துக் கொண்டு வாழும் மனப்பாங்கு அன்றைய கால கட்டத்தில் அதிகமாக நிலவி வந்துள்ளதை ,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பெண்கள் வீட்டிற்குள் மட்டுமே வாழ வேண்டிய கட்டுப்பாட்டில் உள்ளனர்

**(பிரதாப முதலியார் சரித்திரம், பக். 102).6**

இந்நாவல் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மைஉண் டாகப் பெறின் (குறள் எண் 54)7**

இக்குறள் வாயிலாக பெண்களின் கற்பு மற்றும் ஒழுக்கம் முக்கியத்துவம் பெற்றிருந்ததையும் காணலாம்.

**கீழ்ப்படிதல்**

பெண்கள் ஆண்களுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்ற கருத்து தெளிவாக வெளிப்படுகிறது

**(மீனாட்சி, 2015).8**

இதனையே வள்ளுவமும்,

**இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும் ( குறள் 903)9**

என்ற குறள் குடும்பத்தில் கணவனைவிட மனைவி தாழ்ந்து இருக்க வேண்டும் என்ற கருத்தை வலிறுத்துவதாகக் கருதப்படுகிறது.

மேலும்,

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை. (குறள் எண் 54)10**

ஆணின் பாதங்களை தொழக்கூடியவள் பெய் என்று சொன்னால் பெய்யுமாம் மழை ஆண்களுக்கு பெண்கள் கீழ்ப்படிந்து வந்த நிலையை நயம்படக் கூறுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**கல்வி வாய்ப்புகளின் குறைவு**

பெண்களுக்கு கல்வி பெறும் வாய்ப்புகள் குறைவாக இருந்தன. சமூக முன்னேற்றத்தில் அவர்களின் பங்கு குறைக்கப்பட்டுள்ளதை தெளிவாகக் காட்டுகிறது இந்நாவல்

**ஒழுக்கக் கட்டுப்பாடு**

பெண்களின் நடத்தை குறித்து கடுமையாக கண்காணிக்கப்படுகிறது. நல்லொழுக்கம் அவர்களின் முக்கிய பண்பாகவும் குடும்பத்தின் மகிழ்ச்சிக்கும், உயர்விற்கும், மனைவியின் ஒழுக்கமே அடிப்படையாக இருந்தமையைக் காணலாம்.

**ஆண்-பெண் உறவுகள் -ஆணாதிக்க அமைப்பு**

நாவலில் ஆண் ஆதிக்கம் தெளிவாக காணப்படுகிறது. குடும்ப முடிவுகள் அனைத்தும் ஆண் மையமாக அமைகின்றன

**(பிரதாப முதலியார் சரித்திரம், பக். 45).11**

**அன்பும் கட்டுப்பாடும்**

ஆண்-பெண் உறவுகள் அன்பின் அடிப்படையில் இருந்தாலும், பெண்களின் சுயாதீனம் கட்டுப்படுத்தப்படுகிறது.

**சமத்துவமின்மை**

ஆண்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. இது பாலின வேறுபாட்டை வெளிப்படுத்துகிறது.

**ஆசிரியரின் பார்வை**

மயூரம் வேதநாயகம் பிள்ளை, பெண்களின் நிலையை உணர்ந்து, சில இடங்களில் அவர்களின் சிக்கல்களை வெளிப்படுத்துகிறார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இது சமூக சீர்திருத்த எண்ணங்களின் ஆரம்பமாகக் இருக்கலாம்.

**ஆய்வுப் பார்வை**

1. இந்நாவல் பெண்களின் நிலையை வெளிப்படுத்தும் முக்கிய படைப்பாகும்.

2. முழுமையான சமத்துவக் கருத்தை முன்வைக்கவில்லை.

3. பாரம்பரியத்தையும் மாற்றத்தையும் இணைக்கும் இடைநிலை சிந்தனையை காட்டுகிறது.

**இன்றைய பார்வையில் மதிப்பீடு**

இன்றைய சமத்துவக் காலத்தில், இந்நாவலில் காணப்படும் பாலின வேறுபாடுகள் விமர்சிக்கப்படுகின்றன. ஆனால், அந்தக் காலத்தில் இது முன்னேற்ற சிந்தனையை வெளிப்படுத்திய தாகக் கருதப்படுகிறது.

**முடிவுரை**

பிரதாப முதலியார் சரித்திரம் நாவல், தமிழ் சமூகத்தில் நிலவிய ஆண்-பெண் உறவுகளையும், பாலின வேறுபாடுகளையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ஆண்கள் அதிகாரத்தின் சின்னங்களாகவும், பெண்கள் கட்டுப்பாட்டின் கீழ் வாழும் நிலைகளாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.

**Footnotes (அடிக்குறிப்புகள்)**

**1.** க. நாகராஜன், தமிழ் நாவல் வரலாறு, 2005

**2.** மயூரம் வேதநாயகம் பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், 1879.

3. திருக்குறள்

4. சு. இளங்கோவன், தமிழ் சமூக வரலாறு, 2010.

5. திருக்குறள்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

6. திருக்குறள்

7. மயூரம் வேதநாயகம் பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், 1879.

8. திருக்குறள்

9.ரா. மீனாட்சி, பெண்ணியம் மற்றும் தமிழ் இலக்கியம், 2015.

10.திருக்குறள்

11.திருக்குறள்

12. மயூரம் வேதநாயகம் பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், 1879.

**துணை நின்ற நூல்கள் (References)**

1.மயூரம் வேதநாயகம் பிள்ளை. பிரதாப முதலியார் சரித்திரம். சென்னை: 1879.

2.நாகராஜன், க. தமிழ் நாவல் வரலாறு. சென்னை: New Century Book House, 2005.

3.இளங்கோவன், சு. தமிழ் சமூக வரலாறு. மதுரை: Kalaignar Publications, 2010.

4. மீனாட்சி, ரா. பெண்ணியம் மற்றும் தமிழ் இலக்கியம். கோயம்புத்தூர்: Ariviyal Publications, 2015.

5. திருக்குறள்